7 302/14/12

அனுப்புநர்

உறுப்பினர்-செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
தாளமுத்து நடராஜன் மாளிகை,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.

பெறுநர்

ஆணையாளர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை-600 003.

---

கடித எண். B3/21554/2005 நாள்: 13-12-2006.

ஐயா/அம்மையீர்,

பொருள்: செ.பெ.வ.குழுமம் - திட்ட அனுமதி - நில அளவை எண். 207பகுதி. மனைக் எண் 318. கோயம்பேடு. கிராமம், ~~கதவு எண். மனைக் எண் 318~~, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு திட்டம் - சாலை/~~தெரு/சந்து~~ சென்னை 600040 இல் ~~அடித்தளம் + வாகன நிறுத்துத் தளம்~~ தற்போதுள்ள தரைத்தளம் + ~~இடைத்தளம்~~ 2 தளங்கள் கொண்ட குடியிருப்பு/~~வணிகக்~~ கட்டிடத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டிருப்பது - தொடர்பாக.

P.R. 15/12
DESPATCHED

பார்வை: 1. சிறப்புக் கட்டிடப்பிரிவு/~~பலவகைப்பிரிவு~~ எண். 816/2005 இல் 19-8-2005 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.

(2) இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித எண். நாள் 23/2/06.

(3) விண்ணப்பதாரர் கடிதம் நாள் 29-5-2006.

(4) இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித எண் நாள் 23/10/2006.

(5) விண்ணப்பதாரர் கடிதம் நாள் 9/11/2006

(6) இதே எண் கொண்ட இவ்வலுவலக கடிதம் நாள் 24/11/2006.

(7) விண்ணப்பதாரர் கடிதம் நாள் 7-12-2006 மற்றும் திருத்திய வரைபடம்

நில அளவை எண். 318. கோயம்பேடு. கிராமம் தமிழ்நாடு ~~கதவு எண்.~~ வீட்டு வசதி வாரிய குடியிருப்பு திட்டம் ~~சாலை/தெரு/சந்து~~ சென்னை 600040 இல் ~~அடித்தளம்~~ + ~~வாகன நிறுத்துத்தளம்~~ + தரைத்தளம் + ~~இடைத்தளம்~~ 2 தளங்கள் கொண்ட 6 குடியிருப்புகள் ~~/வணிகக்~~ கட்டிடத்தில், கூடுதல் கட்டிடம் ~~குடியிருப்புகள் மற்றும் வணிக உபயோகம் கொண்ட கட்டிடத்தைக்~~ கட்டுவதற்கு, பார்வை-1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை-7ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 4இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண். C 15785 நாள் 09/11/2006. இல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ. 7,000/= |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. |
| வரன்முறைக் கட்டணம் | ரூ. |
| திறந்தவெளிக் கட்டணம் | ரூ. |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 10,700/= |
| கழிவு நீர்த்தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ. 10,000/= |
| மொத்தம் | ரூ. 27,700/= |

இவ்விண்ணப்பதாரர் சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து பார்வை இல் கண்டுள்ள நீதிப் பேராணை பெற்று, காப்புறுதிக் கட்டணங்களுக்குப் பதிலாக ரூ. (ரூபாய் ) – க்கு வங்கியிலிருந்து வரை செல்லுபடியாகும் வங்கி உத்திரவாதத்தை அளித்திருக்கிறார்.

3. அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணத்திற்காக, மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்" என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ. 13,600/= (ரூபாய் பதின்மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) – க்கான வரைவோலையை விண்ணப்பதாரர் தனது 09/11/06 நாள் கடிதத்துடன் கொடுத்துள்ளார்.

ஆ) கழிவுநீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பித்து, உரிய அனுமதியைப் பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டுமே நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் கழிவு நீரகற்றத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பிக்க

வேண்டும். இணைப்பிற்கான அனுமதி கிடைத்த பின் தான் குழாய் அமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துக் கிணறுகளும், மேல்நிலைத் தொட்டிகளும், கழிவுநீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதாரமுறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழைநீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்திலிருந்தும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும். அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

5. எஸ்.பி/சிறப்புக் கட்டிடம்/ 532 /2006 நாள் என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி -12-2006 இருந்து 12-2009 வரை செல்லுபடியாகும்.

6. இந்த ஒப்பளிப்பு அனுமதியாவது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

7. கட்டிடம் கட்டுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

13/12/06

உறுப்பினர்-செயலருக்காக.

இணைப்பு: 1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

12/12/06

நகல்: 1. திரு/திருமதி டி.ஜி. ஜெயலட்சுமி,
மனை எண் 3/8/5, அப்பு காலனி,
பெல்லா ஏரியா,
அண்ணா நகர் மேற்கு,
சென்னை-600040.

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority),
108, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

3. வருமானவரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.